# அத்தியாயம் - 11

# கொடுப்பனவுகளும் தீர்ப்பனவுகளும்

## 11.1 கொடுப்பனவ மற்றும் தீர்ப்பனவு முறைமை

தேசிய கொடுப்பனவு முறைமையானது (i) ஒரு தொகுதி கொடுப்பனவு சாதனங்கள்; (ii) பெறுவோர், கொடுப்பனவு செய்வோர் மற்றும் நிதியியல் இடையீட்டாளர் என செயற்படும் தனிநபர்களும் கம்பனிகளும்; (iii) சுமுகமான நிதிகளின் பரிமாற்றத் திற்கு வசதியாக சிறந்த சட்ட கட்டமைப்பை ஏற்படுத்தக் காணப்படும் நடைமுறைகள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டங்கள்; (iv) தீர்ப்பனவு மற்றும் கொடுப்பனவு முறைகள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. திற மையானதும் காத்திரமானதுமான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையானது நிதித்துறையின் அபிவிருத்திக்கும் நிதித்துறையின் உறுதிப்பாட்டை பேணவும் அவசியமானதாகும்.

மத்திய வங்கி அதன் நவீன மயமாக்கல் திட்டத்தின் கீழ் 2001 இல் ஆரம்பிக்கப்பட்ட செயற் றிட்டமான தொழில் நுட்பத்தில் மேம்பட்ட கொடுப்பனவு முறைகளை இலங்கையில் அறிமுகப்படுத்தும் நடவடிக்கையானது 2003 ஆம் ஆண்டில் மேலும் பலமடைந்தமையை இவ்வாண்டு எடுத்துக்காட்டியது. இச் செயற்றிட்டத்தின் கீழ் இதுவரை கையால் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் கணனி அடிப்படையிலான அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைக்கும் இதுவரை பத்திரங்களாக விநியோகிக்கப்பட்ட அரச பிணையங்களானவை பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையூடாக பத்திரமற்ற வடிவத்திற்கும் மாற்றப்பட்டன; வங்கியின் சொந்த கணக்கீட்டு முறையும் திறைசேரி முகாமையும் தன்னியக்கமான பொது கணக்கு பேரேட்டு மற்றும் திறைசேரி வணிக கையாளல் அறை முகாமை முறை நிறுவப்பட்டதனூடாக தன்னியக்கமாக்கப்பட்டன. பத்திர ங்களற்ற பிணையங்களின் தீர்ப்பனவு முறையும் மத்திய வைப்பக முறையும் இலத்திரனியல் வடிவத்தில் விநியோகிக்கப்பட்ட அரச பிணையங்களின் பதிவேடுகைளக் கொண்டிருந்தன. இம்முறைகள் "லங்கா செக்குயர்" என வர்த்தக அடையாள பெயரினால் அழைக்கப்பட்டன. அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையும் லங்காசெக்கியரும் "லங்கா செற்றில்" என வியாபார பெயர் குறியிடப்பட்டன. அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையானது 2003 செத்தெம்பரில் செயற்பட ஆரம்பித்தது. மற்றைய முறைமைகள் 2004 ஆரம்பத்தில் தொடங்கி வைக்கப்பட்டன.

மத்திய வங்கியானது முக்கியத்துவமில்லாத செயற்பாடுகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்வதென்ற அடிப்படையில் 2002 ஏப்பிறலில் தனது காசோலை

அட்டவணை 11.1
காசல்லா கொடுப்பனவுகளின் கொடுக்கல் வாங்கல்களின் அளவும் பெறுமதியும்

| கொடுப்பனவு முறை | 2002 | | 2003 | |
|---|---|---|---|---|
| | அளவு ('000) | பெறுமதி (ரூ.பில்) | அளவு ('000) | பெறுமதி (ரூ.பில்) |
| பாரிய பெறுமதி கொடுப்பனவுமுறை | | | | |
| இலங்கை மத்திய வங்கியின் நடைமுறைக்கணக்கு தீர்ப்பனவுமுறை(அ) | 146,171 | 19,475.4 | 102,581 | 12,749.8 |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவுமுறை (ஆ) | - | - | 38 | 4,210.0 |
| சில்லறைப் பெறுமதி கொடுப்பனவு முறை | | | | |
| பிரதான காசோலை தீர்ப்பனவுமுறை | 35,487 | 2,444.9 | 36,483 | 2,676.6 |
| பிராந்திய காசோலை தீர்ப்பனவுமுறை | 1,356 | 46.6 | 1,342 | 50.6 |
| இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறை | 1,609 | 1,335.7 | 2,017 | 979.3 |
| அட்டைகளை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுமுறை | | | | |
| (i) த.கூ. பொறி | 25,118 | 71.9 | 33,569 | 120.4 |
| (ii) வி.பீ.இ.நி மாற்றல் | 5,940 | 24.9 | 7,751 | 31.3 |
| (iii) கடன் அட்டைகள் | 6,256 | 18.2 | 7,676 | 23.2 |
| (iv) படுகடன் அட்டைகள் | 6,809 | 22.4 | 9,098 | 32.6 |
| இணையத்தள வங்கித் தொழில் | 71 | 58.1 | 188 | 80.9 |
| தொலைபேசி வங்கித் தொழில் | 86 | 32.0 | 106 | 2.1 |
| அஞ்சல் சாதனங்கள் | வி.கி | 0.01 | வி.கி | 0.01 |
| மொத்தம் | 228,903 | 23,530.1 | 200,849 | 20,957.0 |
| ஐ.அ.டொலர் காசோலைத் தீர்ப்பனவுமுறை (இ) | 17 | 1.9 | 86 | 10.7 |

மூலம். இலங்கை மத்திய வங்கி

(அ) 2003 சனவரி 1இலிருந்து செத்தெம்பர் 05 வரை
(ஆ) 2003 செத்தெம்பர் 8இலிருந்து 2003 திசெம்பர் இறுதிவரை
(இ) ஐ.அ.டொலர் காசோலை தீர்ப்பனவுமுறை 2002 ஒத்தோபர் 01ஆம் நாளன்று தொடங்கப்பட்டது

சிறப்புக்குறிப்பு 22

## இலங்கையின் கொடுப்பனவு முறைமையிலான முக்கிய நிகழ்வுகளின் வரிசைப்பட்டியல்

| | |
|---|---|
| 1950 | இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்டதுடன் கொழும்பு தீர்வகத்தின் தொழிற்பாடுகள் வங்கியினால் பொறுப்பேற்கப்பட்டன. |
| 1988 | ஆட்கள் மூலமான காசோலைத் தீர்ப்பனவு 1988 மாச்சில் இலங்கைத் தன்னியக்க தீர்வகம் இலங்கை மத்திய வங்கியால் நிறுவப்படும் வரை தொடர்ந்தது. |
| 1994 | இலங்கை மத்திய வங்கி இலங்கை வங்கிகளுக்கிடையேயான கொடுப்பனவு முறைமையை அறிமுகப்படுத்தியது. |
| 2002 ஏப்பிறல் | இலங்கை தன்னியக்கத் தீர்வகம் மற்றும் இலங்கை வங்கிகளுக்கிடையேயான கொடுப்பனவு முறைமையின் தொழிற்பாடுகள் வெளியாருக்கு ஒப்படைக்கப்பட்டதுடன், வங்கிகளுக்கிடையேயான தீர்ப்பனவு நடவடிக்கைகளின் தொழிற்பாடுகளை பொறுப் பேற்பதற்கு லங்கா கிளியர் பிறைவேற் லிமிட்டெட் நிறுவப்பட்டது. |
| 2002 ஒத்தோபர் | 'லங்கா கிளியர்' ஐ.அ.டொலர் காசோலைத் தீர்ப்பனவுகளை சம்பத் வங்கியினால் கொடுத்துத் தீர்க்கும் ஏற்பாட்டுடன் பொறுப்பேற்கும் வகையில் அதன் தொழிற் பாடுகளை விரிவுபடுத்தியது. |
| 2003 செத்தெம்பர் | அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை நடைமுறைக்கு வந்தது. |
| 2003 நவெம்பர் | இலங்கை மத்திய வங்கியில் தன்னியக்க பொதுப்பேரேட்டு முறைமை அறிமுகப் படுத்தப்பட்டது. |
| 2004 சனவரி | இலங்கை மத்திய வங்கியில் திறைசேரிக் கையாள்கை அறைமுகாமைத்துவ முறைமை அறிமுகப்படுத்தப்படும். |
| 2004 பெப்புருவரி | பத்திரங்களற்ற பிணைய தீர்ப்பனவு முறைமை அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையுடன் ஒன்றிணைக்கப்பட்டது. |

தீர்ப்பனவு மற்றும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறை எனப்படும், நேரடியற்ற இலத்திரனியல் கொடுப்பனவு முறையை புதிதாக உருவாக்கப்பட்ட லங்கா கிளீயர் (தனி) கம்பனி என்ற மத்திய வங்கியாலும், உரிமம் பெற்ற வணிக வங்கிகளாலும் கூட்டாக உரிமை கொள்ளப்பட்ட கம்பனிக்கு மாற்றியது. லங்கா கிளியர் கம்பனியானது புதிய முகாமைத்துவத்தையும், புதிய தொழில் நுட்பத்தையும் பெற்றும் செலவு முறைந்த செயற்பாட்டு முறைமையொன்றினூடாக கொடுப்பனவு சாதனங்களின் தீர்ப்பனவு செய்முறையின் திறமையை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. முன்நோக்கி நகரும் உத்தி யொன்றின் படி மத்திய வங்கியும், லங்கா கிளியர் கம்பனியும் காசோலை உருவமைத்தல்/குறைத்தல் செயற்றிட்டத்தினை 2004 இன் இறுதியில் நடைமுறைப் படுத்துவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வந்தன. சில்லறை கொடுப்பனவுகளிலும், இலத்திரனியல் ரீதியிலான காசோலைகளைச் சமர்ப்பிப்பதிலும் காணப்பட்ட சட்டரீதியான தடைகளை நீக்க மத்திய வங்கியானது கொடுப்பனவு கொடுக்கல் வாங்கல் சட்டம் ஒன்றை வரைவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. இச்சட்டமானது பாராளுமன்றத்தில் 2004 இல் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தனிநபர்களினதும் சிறிய அளவான நிறுவனங் களினதும் சில்லறை கொடுக்கல் வாங்கல்களுக்கான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு சாதனமாக காசு பரவலாக விரும்பப்படுவதால் காசல்லா கொடுப்பனவு முறைகளுக்கு மாறிச் செல்வது மெதுவாகவே காணப்பட்டது. ஆனாலும், 2003 இல் இது அதிகரிக்கும் போக்கை காட்டியது. எனினும் காசல்லா கொடுப்பனவுகள் 2003 இல் பெரிய பெறுமதிகளைக் கொண்ட கொடுக்கல் வாங்கல்களில் முன்னிலை பெற்றன.

### 11.2 காசுக் கொடுப்பனவுகள்

மத்திய வங்கியால் 1949 ஆம் ஆண்டு 58 ஆம் இலக்க நாணய சட்ட விதி முறைகளின் கீழ் வழங்கப்படும் நாணயத் தாள்களும், குத்திகளும் தனிநபர்கள் மற்றும் வியாபார நிறுவனங்களைப் பொறுத்தவரை "நேருக்கு நேராக" பொருட்கள் பணிகள் நிதிச் சொத்துக்கள் என்பவற்றை பெற்றுக்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்களுக்கு மிகப் பிரபல்யமான சில்லறைக் கொடுப்பனவு ஊடகமாக 2003 இல் அமைந்தது. சம்பள கொடுப்பனவுகளுக்கு இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறையும் காசு மீளப்பெறுகைகளுக்கு

தன்னியக்க கூற்றுப் பொறிகள், கொடுகடன் அட்டைகள் என்பனவும் அதிகளவில் பயன்படுத்தப்பட்ட போதிலும் பெரும்பாலான நிறுவனங்களில் சம்பளங்களும், கூலிகளும் காசாகவே கொடுப்பனவு செய்யப்பட்டன. காசு அடிப்படையிலான கொடுப்பனவுகளின் ஆதிக்கத்தை புலப்படுத்தும் வகையில் பொதுமக்களால் வைத்திருக்கப்படும் நாணயங்களின் அளவானது 2002 இன் இறுதியில் இருந்த ரூ.75 பில்லியனிலிருந்து 2003 இன் இறுதியில் ரூ.86 பில்லியனாக அதிகரித்து நாணயத்திற்கும், கேள்வி வைப்புக்களுக்கும் இடையிலான விகிதம் 53:47 ஆக பேணப்பட்டது.

## 11.3 காசல்லாத கொடுப்பனவு சாதனங்கள்

2003 இன் இறுதியில் பாவனையிலிருந்த பிரதான காசல்லா கொடுப்பனவு சாதனங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தது:-

(i) பத்திர அடிப்படையிலான சாதனங்கள்; எடுத்துக்காட்டாக காசோலைகள், வங்கி வரைவுகள், மாற்றுண்டியல்கள், வாக்குறுதி சான்றிதழ்கள்; அத்துடன்,

(ii) இலத்திரனியல் சாதனங்கள்; அதேநேர மொத்தத் தீர்ப்பனவுமுறை இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறையில் பற்று/வரவு மாற்றல்கள், பற்று மற்றும் வரவு அட்டைகள், தன்னியக்க கூற்றுப் பொறிகள், விற்பனை மையத்தில் இலத்திரனியல் நிதிய மாற்றல்கள், முன் கொடுப்பனவு அட்டைகள், தொலைபேசி மற்றும் இணையதள வங்கியியலூடான மாற்றல்கள்

### பத்திரங்களின் அடிப்படையிலான சாதனங்கள்

#### காசோலைகள்

அதே நேர மொத்தத் தீர்ப்பனவுமுறை அறிமுகத்தினைத் தொடர்ந்து லங்கா செற்றிலில் பங்கு பெறுவோர் அதாவது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும், முதனிலை வணிகர்களும் தமது நாளாந்த கொடுப்பனவுகளை மத்திய வங்கியின் மீது வரையப்படும் காசோலைகளினூடாக தீர்த்துக் கொள்ள 2003 செத்தெம்பரிலிருந்து அனுமதிக்கப்படாததால் வங்கிகளுக்கிடையிலான பணச்சந்தை, மூலதனச் சந்தை மற்றும் பிணையங்கள் சந்தைகளில் பாரிய பெறுமதி கொடுப்பனவுகள் குறைவடைந்தன. மத்திய வங்கியில் நடைமுறைக் கணக்குகளை வைத்திருந்த அரசாங்கமும் சில அரச முகவரகங்களும் தொடர்ந்தும் மத்திய வங்கியின் மீதான காசோலைகளை பயன்படுத்தின. லங்கா கிளியர் (தனி) லிமிடெட் இக் காசோலைகளை தீர்ப்பனவு செய்தது.

#### அஞ்சல் சாதனங்கள்

2003 இல் அஞ்சல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு காசுக் கட்டளைகளுடனான கொடுப்பனவுகளின் மொத்தப் பெறுமதி 2002 இன் ரூ.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2003 இல் ரூ. 13 பில்லியனாக ஆக இருந்தது.

### இலத்திரனியல் கொடுப்பனவு சாதனங்கள்

#### நேரடி வரவு மாற்றல்கள்

கம்பனி வாடிக்கையாளர்கள் தமது கொடுப்பனவுகளுக்காக நேரடி வரவு மாற்றல்களைப் பயன்படுத்தினர். வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர்கள் ஒரே வங்கியின் கிளை/கிளைகளில் பேணுகின்ற கணக்குகளுக்கிடையிலான வரவு மாற்றங்களை துணைநில் ஒழுங்கு விதியாக எழுத்து வடிவிலான அறிவுறுத்தல்கள் அல்லது தன்னியக்கக் கூற்றுப்பொறி, தொலைபேசி அல்லது இணையத்தளம் போன்ற இலத்திரனியல் ஊடாக மேற்கொள்ளுகின்றனர். உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் வெளிநாட்டிலுள்ள இணைக்கினை நிறுவனங்களுடனான “நொஸ்ரோ” கணக்குகளின் தொடர்பு வங்கிகளுடாக பெருமளவு எல்லை தாண்டிய மாற்றல்களைச் செய்ய அனுமதிக்கப்பட்டனர். 2003இல் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும், வங்கியல்லாக் கம்பனிகளும் ஐக்கிய அமெரிக்காவில் கூட்டிணைக்கப்பட்ட பன்னாட்டு பண மாற்றல் கம்பனிகளின் ஒத்துழைப்புடன் விரைவான நிதிய மாற்றல்களை நடைமுறைப்படுத்தினர்.

#### நேரடி பற்று மாற்றல்கள்

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர்கள் தமது பொது வசதிக் கட்டணங்களை (மின்சாரம், தொலைபேசி, நீர் கட்டணங்கள்) மற்றும் கடன் மீளளிப்புக்கள் கடன் அட்டை கொடுப்பனவுகளை நேரடி பற்று மாற்றல்களூடாக கிரமமாக தீர்த்தனர். வாடிக்கையாளரின் பற்று மாற்றல்கள் வங்கிகளால் காந்த நாடா மற்றும் கணனி இறுவட்டுக்களில் தீர்ப்பனவுக்காக லங்கா கிளியர் (தனி) லிமிடெட்டிற்கு இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறையில் சமர்ப்பிக்கப்பட்டன. அண்மிய ஆண்டுகளில் நேரடிப் பற்று மாற்றல்கள் மெதுவான வளர்ச்சியையே பதிவு செய்தன.

#### கடன் அட்டைகள்

ஆய்விற்குரிய ஆண்டில் ‘பின்னர் தீர்த்தல்’ வகையான ஒரு கொடுப்பனவு ஊடகமான கடன் அட்டைகள் நடப்பாண்டில் சில்லறை கொடுக்கல் வாங்கல்களுக்கு மிக அதிகளவில் பயன்படுத்தப்பட்ட கொடுப்பனவு அட்டையாக விளங்கியது, 2003 இன்

இறுதியில் 9 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும், ஒரு வங்கியல்லா கம்பனியும் இலங்கையில் கடன் அட்டைகளை வழங்கியிருந்தன. பெரும்பான்மையான உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளால் விநியோகிக்கப்பட்ட கடன் அட்டைகள் விஸா, மாஸ்டர் அட்டை அல்லது அமெக்சுடன் இணைந்தவையாக காணப்பட்டன. 2003 இன் இறுதியில் பெரும்பான்மையான அதாவது 79 சதவீத கடன் அட்டைகள் பன்னாட்டு ரீதியில் கொடுப்பனவுகளை மேற்கொள்ள ஏற்கப்படக் கூடியவையாகக் காணப்பட்டன. வழங்கப்பட்ட மொத்த அட்டைகளின் எண்ணிக்கை 2002 இன் 26 சதவீத அதிகரிப்பையும், 24 சதவீத அதிகரிப்பையும் காட்டின. இதற்கு பிரதான காரணம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் தீவிரமான ஊக்குவிப்பு பிரசாரமும் அதிகரித்த வங்கிப் பழக்கம் என்பனவே காரணமாக, 2003 இல் கடன் அட்டைகளினூடாக பதியப்பட்ட மொத்த நடவடிக்கைகளின் அளவும் பெறுமதியும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக்காட்டி முறையே 7.7 மில்லியனாகவும், ரூ.23 பில்லியனாகவும் காணப்பட்டன.

### பற்று அட்டைகள்

உரிமம் பெற்ற வணிக வங்கிகளினால் வழங்கப்படும் பற்று அட்டைகள் உள்நாட்டு வெளிநாட்டு கொடுப்பனவுகள், வங்கி மீதிகளை அறிதல், அட்டை உடமையாளரது கணக்குகள், தன்னியக்க கூற்று பொறி அல்லது விற்பனைப்பீட இலத்திரனியல் நிதி மாற்றல் என்பவற்றினூடாக இலங்கை ரூபாவில் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் உள்ள கணக்கொன்றிலிருந்து (நடைமுறை, சேமிப்பு, வதியாதோர் வெளிநாட்டுச் செலாவணி) மீளப் பெறல் என்பனவற்றிற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. 2003 இறுதியில் 4 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் விசா இலத்திரனியல் அட்டைகள் அல்லது மாஸ்ரர் அட்டைகளை வழங்கியிருந்தன.

### முன் கூட்டி செலுத்தப்பட்ட அட்டைகள்

அண்மைக் காலத்தில் முன்கூட்டி செலுத்தப்பட்ட அட்டைகளின் பாவனை பல்வேறு தொலைபேசி கம்பனிகளால் அட்டைகளின் அடிப்படையிலான வலைப்பின்னல்கள் அறிமுகப்படுத்தப்பட்டதை தொடர்ந்து அதிகளவில் விரிவடைந்தது.

## கொடுப்பனவு அட்டைகளின் உட்கட்டமைப்பு

### தன்னியக்க கூற்றுப்பொறி

1986 இல் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட தன்னியக்க கூற்றுப்பொறிகள் காசு முறைமையின் ஒரு பகுதியாக விரைவாக மாறியுள்ளவேளையில் பயனுறுதிமிக்க காசு முகாமைக்கும் ஊக்கமளிக்கின்றன. 2003 இன் இறுதியில் 14 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும், தேசிய சேமிப்பு வங்கியும் மொத்தமாக 721 தன்னியக்க கூற்று பொறிகளை நிறுவியுள்ளன. இப்பொறிகளூடாக மேற்கொள்ளப்பட்ட மொத்த நிதிய கொடுக்கல் வாங்கல்களின் அளவானது தொடர்ச்சியாக அதிகரித்து 2003 இல் 34 மில்லியனாகக் காணப்பட்டது. தன்னியக்க பொறிகளூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மொத்த பெறுமதி 2002 இல் ரூ.72 பில்லியனாக இருந்து 2003 இல் ரூ.120 பில்லியனாகக் காணப்பட்டது.

### விற்பனைப் பீடத்தில் இலத்திரனியல் நிதி மாற்றல்கள்

1994 இல் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட விற்பனைப் பீடத்திலான இலத்திரனியல் நிதிய மாற்றல்கள் காசுக்கும், காசோலைகளுக்கும் ஒரு மாற்றாக படிப்படியாக மாறிவருகின்றன. நாட்டில் மொத்தமாக காணப்பட்ட விற்பனைப் பீடத்திலான இலத்திரனியல் நிதிய மாற்றல்கள் பொறிகளின் எண்ணிக்கை 2003 இல் 5,114 ஆகவும் இவற்றினூடான மேற்கொள்ளப்பட்ட மொத்த நிதிய கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை 2002 இன் கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கையான 6 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 8 மில்லியனாகவும் காணப்பட்டன. 2002 உடன் ஒப்பிடுகையில் 2003 இல் கொடுக்கல்வாங்கல்களின் மொத்தப் பெறுமதி 26 சதவீதத்தால் அதிகரித்து 31 பில்லியனாக காணப்பட்டது.

## தொலைபேசி/ செல்லிடத் தொலைபேசி / தொலை வங்கித் தொழில் வசதிகள்

வாடிக்கையாளர்கள் பின்வரும் பணிகளை தொலைபேசி/செல்லிடத் தொலைபேசி/தொலை வங்கி வசதிகளூடாக பெறலாம்:- கணக்கு மீதிகளை விசாரித்தல், கடன் அட்டை பணிகள், தன்னியக்க கூற்றுப்பொறி மற்றும் கடன் அட்டைகள் தொலைந்து போதல் அல்லது களவாடப்படுதலை அறிவித்தல், வங்கிப்பணிகள் மற்றும் சாதனங்கள் மீதான தகவல்களைப் பெறுதல்.

2003 இன் இறுதியில் 9 உரிமம் பெற்ற வணிக வங்கிகள் தொலைபேசி/ செல்லிடத் தொலைபேசி/ தொலை வங்கி வசதிகளை தனிப்பட்ட மற்றும் கம்பனி வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வந்தன. வங்கிக்கு வங்கி அவற்றின் வியாபார உத்திகளைப் பொறுத்து இப்பணிகளின் தரமும் வாடிக்கையாளர் இப்பணிகளைப் பயன்படுத்தும் அளவும் மாறுபடுகின்றன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகின்றபோது 2003 இல் இப்பணிகளைப் பெற பதிவுசெய்து கொண்ட வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க 50 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. தொலைபேசி/ செல்லிடத் தொலைபேசி/ தொலை வங்கியியல் முறையில் இடம்பெற்ற மொத்த நிதிய கொடுக்கல் வாங்கல்களின் தொகையும் 23 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. எனினும் இவ் ஊடகத்தினூடாக கையாளப்பட்ட கொடுக்கல்

வாங்கல்களின் பெறுமதியானது கணிசமாகக் குறைந்து 2002 இன் ரூ.32 பில்லியனிலிருந்து 2003 இல் ரூ.2 பில்லியனாகக் காணப்பட்டது. இதற்குப் பிரதான காரணம் சில வாடிக்கையாளர் உயர் பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களுக்கு இணையத்தளத்தைப் பயன்படுத்த விரும்பியமையேயாகும்.

### இணையத்தள வங்கித் தொழில்

வங்கி வாடிக்கையாளருக்கு பாரம்பரிய வங்கிப் பணிகளை வசதியாகவும், திறமையாகவும் வழங்கும் பொருட்டு இணையத்தள வங்கித்தொழில் இலங்கையில் 1999 இல் ஆரம்பிக்கப்பட்டது இவ்வசதியைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களின் மொத்தத் எண்ணிக்கை 2003 இறுதியில் 24,650 ஆக விளங்கிய வேளையில் 2003 இல் மேற் கொள்ளப்பட்ட இணையத்தள வங்கித் தொழில் கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி 39 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.81 பில்லியனாக விளங்கியது.

## 11.4 வங்கிகளுக்கிடையிலான தீர்த்தல், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகள்

2003 இல் வங்கிகளுக்கிடையிலான தீர்த்தல், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுக்காக பின்வரும் முறைகள் நடைமுறையிலிருந்தன:-

- மத்திய வங்கியின் நடைமுறைக் கணக்கு தீர்ப்பனவு முறைமை;
- அதே நேர மொத்த தீர்ப்பனவு முறைமை;
- இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறை;
- "லங்கா கிளியர்"காசோலை தீர்த்தல் முறைமை;
- பிராந்திய காசோலை தீர்த்தல் முறைமை; மற்றும்
- ஐ.அ.டொலர் காசோலை தீர்த்தல் முறைமை

### மத்திய வங்கியின் நடைமுறைக் கணக்கு தீர்ப்பனவு முறைமை

அதே நேர மொத்த தீர்ப்பனவு முறைமை 2003 செத்தெம்பர் 8 இல் ஆரம்பிக்கப்படும் வரை மத்திய வங்கி நடைமுறைக்கணக்கு தீர்ப்பனவு முறை நடைமுறையிலிருந்தது. 2003 இல் 01 சனவரிக்கும் 05 செத்தெம்பருக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ரூ.12,750 பில்லியன் பெறுமதியான 103 மில்லியன் கொடுக்கல் வாங்கல்களை இம்முறை தீர்ப்பனவு செய்தது.

### அதே நேர மொத்த தீர்ப்பனவு முறைமை

மத்திய வங்கியில் பங்குபற்றுனரால் பேணப்படும் தீர்ப்பனவு கணக்களிலுள்ள மீதிகளைப் பயன்படுத்தி ஒவ்வொரு கொடுப்பனவு கட்டளையையும் உடனடியாகவும், மாற்றமுடியாத வகையிலும் செய்முறைப்படுத்தும் கணனி அடிப்படையிலான நேரடி வரவுகளை பரிமாற்றும் தீர்ப்பனவு முறையே அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையாகும். அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையானது உயர் பெறுமதி மற்றும் நேர முக்கியத்துவம் வாய்ந்த கொடுப்பனவுகளை இலங்கை ரூபாவில் நேரடி பங்குபற்றும் நிறுவனங்களுக்கிடையிலும் (மத்திய வங்கி உட்பட) வாடிக்கையாளரிடமிருந்து வாடிக்கையாளருக்கு ஒரு நேரடி பங்குபற்றும் நிறுவனமூடாகவும் தீர்ப்பனவு செய்கிறது. இவை அழைப்புச் சந்தை, அரசாங்க பிணையங்கள் சந்தை, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை (ரூபா பகுதி) மத்திய வங்கி திறந்த சந்தை தொழிற்பாடுகள், காசோலைகள் மற்றும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைகளின் கீழான வங்கிகளுக்கிடையிலான தேறிய தீர்ப்பனவு கடப்பாடுகள்/கோரிக்கைகள் மற்றும் மத்திய வங்கியின் பிராந்திய காசோலை தீர்ப்பனவு என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. செத்தெம்பர் 8 இற்கும் 2003 திசெம்பர் இறுதிக்கும் இடையிலான காலப்பகுதியில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையினூடாக தீர்க்கப்பட்ட எல்லா சில்லறை கொடுப்பனவு முறைகளினதும் தேறிய தீர்ப்பனவு பெறுமதி ரூ.142 பில்லியனாக அல்லது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதியில் 3 சதவீதமாக காணப்பட்டது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையின் பங்குபற்றுநர் தமது வாடிக்கையாளருக்கான சில கொடுப்பனவுகளை, குறிப்பாக கம்பனிகளுக்கான நேர முக்கியத்துவம் வாய்ந்த கொடுப்பனவுகளை அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை ஊடாக மேற்கொண்டனர்.

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையினால் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு செத்தெம்பர் 8 இற்கும் 2003 திசெம்பர் இறுதிக்குமிடையில் 38,454 ஆக இருந்ததுடன் அவற்றின் பெறுமதி ரூ.4,210 பில்லியனாக இருந்தது. நாளொன்றுக்கு தீர்ப்பனவு செய்யப்பட்ட சராசரி அளவும் பெறுமதியும் முறையே 499 ஆகவும் ரூ.55 பில்லியனாகவும் இருந்தது. மத்திய வங்கி அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையினை இயக்கியதுடன் அதில் பங்குபற்றவும் செய்தது. ஏனைய பங்குபற்றுநர்களாக 22 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் 8 வங்கியல்லா முதனிலை வணிகர்களும்[1] ஊழியர் சேமலாப நிதியமும் விளங்கின.

2003 செத்தெம்பர் 8 இலிருந்து திசெம்பர் இறுதி வரையான காலப்பகுதியில் ஆகக்கூடிய எண்ணிக்கை யான கொடுக்கல்வாங்கல்கள் 659 ஆகவும்

1. 2003 இறுதியில் 3 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் 8 வங்கியல்லா முதனிலை வணிகர்களையும் உள்ளடக்கி அரச பிணையங்களில் 11 முதனிலை வணிகர்கள் காணப்பட்டனர்.

வரைபடம் 11.1
அ.நே.மொ.தீர்ப்பனவு கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை
(2003 செப்தெம்பர் 8 - திசெம்பர் இறுதி வரை)




**அட்டவணை 11.2**
**அதேநேர மொத்தத் தீர்ப்பனவுகள்**

2003 செத்தெம்பர் 08 இலிருந்து திசெம்பர் இறுதிவரை

| | |
|---|---|
| மொத்தக் கொடுக்கல் வாங்கல் | |
| கொடுக்கல் வாங்கல்களின் மொத்தஅளவு | 38,454 |
| ரூ. பில்லியனில் மொத்தக் கொடுக்கல் வாங்கல்கள் | 4,210 |
| நாளொன்றிற்கான கொடுக்கல் வாங்கல்களின் அளவு | |
| சராசரி எண்ணிக்கை | 499 |
| ஆகக்கூடிய எண்ணிக்கை(28.11.2003) | 659 |
| நாளொன்றிற்கான கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி | |
| சராசரி பெறுமதி ரூ.மில்லியனில் | 54,675 |
| ஆகக்கூடிய பெறுமதி ரூ.மில்லியனில்(01.10.2003) | 90,605 |
| நாளொன்றிற்கு வழங்கப்பட்ட நாளொன்றிற்கான திரவ வசதியின் பெறுமதி | |
| சராசரி பெறுமதி ரூ.மில்லியன் | 6,490 |
| ரூ. பில்லியனில் ஆகக்கூடிய பெறுமதி (26.9.2003) | 13,334 |

மூலம். இலங்கை மத்திய வங்கி

இருந்ததுடன் ஆகக்கூடிய பெறுமதி ரூ.91 பில்லியனாகவும் இருந்தது. மொத்த கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதியில் ரூ.799 பில்லியன் (அல்லது 19 சதவீதம்) பெறுமதியில் 3,735 (அல்லது 10 சதவீதம்) கொடுக்கல் வாங்கல்கள் மத்திய வங்கியின் கொடுக்கல் வாங்கல்களாகும். அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையின் நாளாந்த அளவினதும் பெறுமதியினதும் நாளாந்த

வரைபடம் 11.2
அ.நே.மொ.தீர்ப்பனவு கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி
2003 செப்தெம்பர் 8 - திசெம்பர் இறுதிவரை




நடத்தை முறையே வரைபடம் 11.1 இலும் வரைபடம் 11.2 இலும் காட்டப்பட்டுள்ளதுடன் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையின் மணித்தியால பரம்பல்களின் சராசரி வியாபாரத்தினது நாளொன்றில் சராசரி கொடுக்கல் வாங்கல் வரைபடம் 11.3 இல் காட்டப்பட்டுள்ளது.

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை முக்கியமாக கூடிய பெறுமதியுடைய கொடுப்பனவு களையே தீர்ப்பனவு செய்தது. ஏறக்குறைய தீர்ப்பனவு செய்யப்பட்ட எல்லா கொடுக்கல்வாங்கல்களும் ரூ.1 மில்லியனை விட அதிகமானதாக இருந்தன. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையின் நடைமுறைப் படுத்தலுடன் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையின் ஊடாக முன்னர் தீர்ப்பனவு செய்யப்பட்ட உயர் பெறுமதி கொண்ட அதே நாள்

வரைபடம் 11.3
2003 இல் அ.நே.மொ.தீர்ப்பனவு கொடுக்கல் வாங்கல்களின் மணித்தியாலத்திற்கான பரம்பல்




கொடுப்பனவுகள் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைக்கு மாற்றப்பட்டன. இலங்கை வங்கிகளுக் கிடையிலான கொடுப்பனவு முறைமையின் பெரிய பெறுமதியில், குறிப்பாக ரூ.10 மில்லியனுக்கு மேற்பட்ட கொடுக்கல்வாங்கல்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது.

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையானது கொடுப்பனவு அறிவுறுத்தல்களை வரிசைப்படுத்த அனுமதிக்கின்றது. அதாவது கிடைக்கவுள்ள நிலுவையிலுள்ள நிதிகளைக் கருத்திற்கொண்டு ஒரு பங்குபற்றுநர் கொடுப்பனவு செய்திகளை முன்கூட்டியே பதிவு செய்யலாம். இவ்வாண்டில் வரிசைப்படுத்தப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் விகிதாசாரம் மிகக் குறை வாகவே இருந்தது.

## நாளொன்றுக்கிடையிலான திரவத்தன்மை வசதி

உடனடியாக கொடுப்பனவு அறிவுறுத்தல்களை செயற்படுத்த அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை பங்குபற்றுநர்களது திரவத்தன்மை தேவைப்பாடுகளைக்

*சிறப்புக்குறிப்பு 23*

## அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையும் பத்திரமற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையும்

நிதியியல் முறைமையின் வினைத்திறனையும் தாக்குப்பிடிக்கும் தன்மையையும் மேம்படுத்தும் குறிக்கோளுடன் இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப் படுத்தப்பட்ட நான்கு முக்கிய சீர்திருத்தங்கள் 2004 பெப்புருவரியில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும்.

இச்சீர்திருத்தங்கள் கீழ்க்காணும் அறிமுகங்களை உள்ளடக்குகின்றன.

- அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை
- அரச பிணையங்களுக்கான பத்திரமற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையும் மத்திய வைப்பக முறைமையும்
- மத்திய வங்கியின் பொதுப்பேரட்டு முறைமையை தன்னியக்கப்படுத்தல்.
- மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் திறைசேரிக் கையாள்கை அறை முகாமை முறைமை.

### அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை (RTGS)

இம்முறைமையானது இலத்திரனியல் முறையை, இயலச்செய்கிறது. அதாவது பங்கேற்பாளர்களிடையே கூடிய பெறுமதிகளையும், அவசர கொடுப்பனவுகளையும் உடனடி மாற்றலுக்கு வழிசெய்கிறது. தீர்ப்பனவு அதேநேர மொத்த அடிப்படையில் அமையும். இம்முறைமையில் பதிவுகள் ஒரு முறை மேற்கொள்ளப்பட்டதும் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல் இறுதியானதாகவும் இரத்துச் செய்யப்பட முடியாததாகவும் வந்துவிடும்.

இம்முறைமையின் பங்கேற்பாளர்கள் இலங்கை மத்திய வங்கி, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், முதனிலை வணிகர்கள், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் கொழும்புப் பங்குப்பரிவர்த்தனையின் மத்திய வைப்பக முறைமை எனும் நிறுவன ரீதியிலான ஏனைய இரண்டு பங்கேற்பாளர்கள் போன்றவற்றையும் உள்ளடக்குகின்றன.

அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்பாளர்களுக்கு இதனால் கிடைக்கப்பெறும் நன்மைகள்:

- நிதியங்களின் உடனடி மாற்றல்
- இலங்கை மத்திய வங்கியுடனான கொடுக்கல் வாங்கல்களில் காசோலைகளின் பயன்பாடு இல்லாதொழிக்கப்பட்டமையால் அசௌகரியக் குறைவு.
- காலதாமதக் கொடுக்கல்வாங்கல்கள் குறிப்பிடத்தக்களவில் குறைக்கப்பட்டதால் திரவத் தன்மை முகாமையில் முன்னேற்றம்.
- கொடுக்கல்வாங்கல்களின் புரள்வு மற்றும் அளவு என்பன பன்மடங்குகளாக அதிகரித்தமையாலான நன்மைகள்.
- இலங்கை மத்திய வங்கியால் வழங்கல் செய்யப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியை வட்டி இல்லாது அடைதல்.

இம்முறைமையால் பொதுமக்களுக்கு கிடைக்கும் கணிசமான நன்மைகளும் பெருமளவில் காணப்படுகின்றன. அவர்கள் பின்வருவனவற்றால் நன்மையடைவர்.

- குறைக்கப்பட்ட காசோலை மிதப்பு
- இணைக்கிணை நிறுவனங்களிடமிருந்து அவர்களுக்குரிய பெறுகைகள் நேரகாலத்துக்கு கிடைக்கப்பெறுதல்.
- அவசரக் கொடுப்பனவுகளை செய்யக்கூடிய ஆற்றல்.

### பத்திரமற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை (SSSS)

இப்புதிய முறைமையின் கீழ், அனைத்து திறைசேரி உண்டியல்களும் திறைசேரி முறிகளும் பத்திர மற்ற வடிவில் வழங்கப்படும். உரிமைப்பத்திர பதிவகம் அதாவது அரசாங்க பிணையங்களின் மத்திய வைப்பக முறைமை இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படும். இது 'லங்காசெக்குவர்' என அழைக்கப்படும். பத்திர மற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையானது கொடுப்பனவுகளின் பேரில் பிணையங்களின் வழங்கலை இயலச்செய்யும் வகையில் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையுடன் ஒருங்கிணைக்கப்படும். எனவே, பத்திர மற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்பாளர்கள் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்பாளர்களாகவே இருப்பர். பத்திர மற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையின் ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் தகவலைப் பரிமாறும்

**சிறப்புக்குறிப்பு 23( தொடர்ச்சி)**

கணனி நிலையம் ஒன்று வழங்கப்படும். அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை பத்திரமற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை என்பவற்றின் தொடர்பூட்டல் முறையாக 'சுவிவ்ற' என அழைக்கப்படும் (வங்கிகளுக்கிடையே நிதித் தொலைத் தொடர்பூட்டல் களுக்கான உலகளாவிய அமைப்பு) துரித செய்தி வழங்கல் முறைமை விளங்கும். பிணையங்களின் ஒவ்வொரு தொகுதிகளும் அதாவது ஒவ்வொரு ஏலத்திலோ அல்லது முதனிலை வழங்கலிலோ வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறி என்பவற்றின் ஒவ்வொரு முதிர்ச்சியும் ஒத்திசைவான பன்னாட்டு பிணைய அடையாள இலக்கத்தைக் கொண்டிருக்கும். பத்திர மற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையிலும் மத்திய வைப்பக முறைமையிலும் உள்ள அனைத்து பிணையங் களும் இவ் இலக்கங்களால் இனங் காணப்படும்.

'லங்காசெக்குவர்' மத்திய வைப்பக முறைமை அல்லது உரிமைப்பத்திர பதிவகம் பொதுப்படுகடன் திணைக்களத்தில் அமைந்திருக்கும். ஒவ்வொரு பங்கேற்பாளரும் அவர்களின் சொந்த கணக்கில் வர்த்தக நோக்கங்களுக்காக பிணையங்கள் கணக்கைக் கொண்டிருப்பர். தமது சொந்தக் கணக்குகட்கு மேலதிகமாக, முதனிலை வணிகர்களும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் அவற்றின் வாடிக்கை யாளர்கள் சார்பில் கணக்குகளைப் பேணும். அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்வோர், அதாவது தனிநபர்கள், கம்பனிகள் மற்றும் நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள் எந்த ஒரு முதனிலை வணிகருடனோ அல்லது பல வணிகர்களுடனோ அல்லது ஒரு வர்த்தக வங்கியுடனோ அல்லது மேற்கூறிய இரண்டிலும் எந்தளவு எண்ணிக்கையான கணக்குகளைப் பேணுவ தற்கான நெகிழ்ச்சித் தன்மையைக் கொண்டிருக்கும்.

பத்திரமற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை நான்கு வகையான இரண்டாந்தர சந்தைக் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்தும். அவையாவன:-

- உடனடி வாங்கலும் விற்றலும் அதாவது

  வழங்கல் எதிர் கொடுப்பனவு அல்லது பெறுதல் எதிர் கொடுப்பனவு
- இலவச வழங்கல் மற்றும் கட்டணமற்ற கொடுக்கல்வாங்கல்களைப் பெறல்.
- மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்.
- பிணையங்களின் மீள்நிலைப்படுத்துகை.

திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறி ஏலங்கள், வங்கியினுள்ளேயே அபிவிருத்தி செய்யப்பட்ட முறைமையின் அடிப்படையில் இலத்திரனயில் மூலம் இலங்கை மத்திய வங்கியால் நடாத்தப்படும். முதனிலை ஏலம் இறுதியாக்கப்பட்டதை உடனடுத்து ஒவ்வொரு முதனிலை வணிகர்களாலும் கொண்டுவரப்பட்ட பிணையங்களின் அளவு மற்றும் பெறுமதிகள் தானாகவே பத்திரமற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை மையில் பதிவு செய்யப்படும். முதனிலை ஏலங்களில் முதனிலை வணிகர்களுடனான இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் பிணையங்களின் தீர்ப்பனவு வழங்கல் எதிர் கொடுப்பனவு அடிப்படையில் இடம்பெறும். இதற்காக வழங்கல் எதிர் கொடுப்பனவு மாதிரி 2 உபயோகிக்கப்படும். அதாவது கொடுப்பனவு களுக்கு எதிராக தேறப்பட்ட பெறுகைகள் இந்நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும்.

இம்முறைமை T +0 தொடக்கம் T +10 வரையான தீர்ப்பனவை வழங்கும். நிதிய மாற்றங்கள் இடம்பெறுமிடத்து தீர்ப்பனவு தொடர்புபட்டிருக்கும் எந்த வேளையிலும் முறைமையானது நிதியத்துக்கான வாங்குநரின் கணக்கினைச் சரிபார்த்துக் கொள்ளும். வாங்குநர்களின் கணக்கில் கொடுக்கல்வாங்கல்களுக்குப் போதுமானளவு பணம் இருந்தால் மட்டுமே தீர்ப்பனவு இடம்பெறும். கொடுக்கல்வாங்கல்களுக்கான முழுத்தொகையும் ஒரே நேரத்தில் கொடுத்துத் தீர்க்கப்படல் வேண்டும். பகுதியளவிலான தீர்ப்பனவு இம்முறைமையினால் அனுமதிக்கப்பட மாட்டாது.

ஒரு நாளுக்குள்ளேயான தீர்ப்பனவுக்கான திரவத்தன்மை முதனிலை வணிகர்கட்கும், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகட்கும் பிணைகளின் அடிப்ப டையிலும் கட்டணமின்றியும் கிடைக்கத்தக்கதாக இருக்கும். ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதிக்கென எடுக்கப்பட்ட பிணையங்கள் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ விலைகளில் நாளாந்த அடிப்படையில் விலை மதிப்பீடு செய்யப்படும்.

பிணையங்களின் முதிர்ச்சியின் போதும் வட்டிக் கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டிவரும்போதும் இம்முறைமையினால் கொடுப்பனவுக்கான பணிப்புரை கள் தானாகவே பிறப்பிக்கப்படும். பங்கேற்பாளர் களுக்கும் அவர்களது வாடிக்கையாளர் களுக்கும் உரிய சகல கொடுப்பனவுகளும் பங்கேற் பாளர்களின் அதேநேர மொத்த தீர்ப்பனவுக் கணக்குகளில் இடப்படும். தீர்ப்பனவு செய்யப்பட்ட அதேநாளில் தமது

*சிறப்புக்குறிப்பு 23( தொடர்ச்சி)*

வாடிக்கையாளர்களின் கணக்குகளில் வரவு வைப்பது முதனிலை வணிகர்களதும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் பொறுப்பாகும்.

'லங்காசெக்குவர்' மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்களையும் மாத இறுதியிலான நிலுவையையும் உறுதிப்படுத்தி மாதாந்தக் கூற்றுக்களை வழங்கும்.

பொதுமக்கள் வைத்திருக்கும் திறைசேரி உண்டியல்களும் திறைசேரி முறிகளும் அடுத்த சில மாதங்களுள் பௌதீக வடிவில் இல்லாமற் செய்யப்படும். இது பத்திரமற்ற பிணையங்கள் முறைமை திறம்படச் செயற்பட அவசியமாகும். பத்திரத்திலிருந்து பத்திரமற்ற நிலைக்கான மாற்றம் கட்டாயப்படுத்தப்படாததுடன் சுயவிருப்புரிமைக் குட்பட்டதுமாகும். எவ்வாறாயினும், பத்திர முறையிலான பிணையங்களைக் கொண்டிருப்பவர்கள் தமக்குரிய நன்மைகளை அனுபவிக்கும் வகையில் இம்முறைமையைப் பயன்படுத்தும் வசதியைக் கொண்டிருக்க மாட்டார்கள். மாற்ற நடவடிக்கைகள் பற்றி அரசாங்க வர்த்தமானியிலும், செய்தித் தாள்களிலும் வெளியிடப்படும்.

பத்திரமற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையின் நன்மைகள் பின்வருமாறு:

- பத்திர அடிப்படையிலான பிணையங்களை வைத்திருத்தல், வர்த்தகம் செய்தல் என்பவற்றுடன் தொடர்பான முதலீட்டாளர்களின் இடர்நேர்வுகள் முற்றாக இல்லாதொழிக்கப்படும்.
- முதலீட்டாளர்கள் வர்த்தக நடவடிக்கையின் போது பாதுகாப்பு பேணுகை, புறக்குறிப்பிடல், பௌதீக ரீதியான வழங்கல் போன்ற அரசாங்க பிணையங்களின் பத்திர அடிப்படையிலான சான்றிதழ்களைக் கையாளும்போது ஏற்படும் அசௌகரியங்களை அனுபவிக்க வேண்டிவராது.
- புதிய முறைமை வழங்கல் எதிர் கொடுப்பனவு அடிப்படையில் செயற்படும். அதாவது அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை மூலம் கொடுப்பனவு உறுதிப்படுத்தப்பட்டதை உடனடுத்து பத்திரமற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை மூலம் பிணையங்கள் வழங்கப்படும்.
- காலதாமதத்தை ஏற்படுத்தும் இப்போதைய பத்திரமுறைப் பிணையங்கள் வழங்கலைப் போலன்றி வழங்கப்பட்ட அதே நாளிலேயே முதலீட்டாளர்கள் பிணையங்களைப் பெற்றுக் கொள்வர்.
- மத்திய வைப்பக முறைமை ஒவ்வொரு தனிப்பட்ட முதலீட்டாளர் களுக்குமென வெவ்வேறான கணக்குகளைப் பேணுவதுடன் சகல அரசாங்கப் பிணையங்களுக்குமான பாதுகாவலனாகவும் செயற்படும். இதன் மூலம் பௌதீக ரீதியாக வைத்திருப்பதிலான முதலீட்டாளர்களது இடர்நேர்வு தீர்க்கப்படுவதுடன் பாதுகாப்புப் பேணுகை தொடர்பான செலவும் குறைக்கப் படுகின்றது.
- மத்திய வைப்பக முறைமை முதலீட்டாளர்களுக்குரிய சகல கொடுப்பனவுகள் தொடர்பான அறிக்கைகளை முன்கூட்டியே சுயமாகவே பிறப்பிக்கின்றபடியால், முதலீட்டாளர்கள் ஒன்றில் நிதிகளை மீள முதலீடு செய்வதில் அல்லது முதிர்ச்சியடைந்த பெறுகைகளைப் பெறுக்கொள்வதற்கு அல்லது நறுக்கு வட்டிக் கொடுப்பனவுகளை பெறுவதில் இடர்நேர்வை எதிர்கொள்ளத் தேவையில்லை.
- இம் முறைமையின் செயற்றிறன் வர்த்தக நிறைவேற்றத்துக்கான நேரத்தை மீதப்படுத்துவதுடன் அரசாங்க படுகடன் பிணையங்கள் சந்தையில் திரவத்தன்மையை முன்னேற்றும்.
- ஏற்பாட்டுச் செலவுக்குறைப்பு மற்றும் அதிகரித்த திரவத்தன்மை என்பன காரணமாக, முதனிலை வணிகர்கள் தமது வாங்கும் விற்கும் விலைகளிடையேயான இலாப அளவைகக் குறைக்கலாம்.
- இம்முறைமை சந்தைக் கண்காணிப்பையும் முதனிலை வணிகர்களை மேற்பார்வை செய்தலையும் வசதிப்படுத்தும்.

### பொதுப்பேரேட்டு முறைமையும் (GLS) திறைசேரி வணிகப்படுத்தல் அறை முகாமை முறைமையும் (TDRMS)

பொதுப்பேரேட்டு முறைமை, திறைசேரி வணிகப்படுத்தல் அறைமுகாமை முறைமை எனும் பெயர்களில் அறிமுகப்படுத்தப்பட்ட ஏனைய இரண்டு முறைமைகளும் இலங்கை மத்திய வங்கியின் உள்ளக முறைமைகளாகும். பொதுப்பேரேட்டு முறைமையின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் எல்லா உள்ளகக் கணக்குகளும் தன்னியக்கப்பட்டு கணனி அடிப்படையிலான இலத்திரனியல் முறைமைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இதன் விளைவாக, கொடுப்பனவுகளுக்காக காசோலைகள் வழங்கப்

**சிறப்புக்குறிப்பு 23( தொடர்ச்சி)**

படுவதும் மற்றும் மீண்டும் எழுதும் கணக்கீட்டுப் பதிவுகளுக்காக உறுதிச்சீட்டுக்கள் வழங்குதலும் நிறுத்தப்பட்டுள்ளன. இது இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டு முறைமையில் கணிசமான வினைத்திறனை ஏற்படுத்தியுள்ளது. திறைசேரிக் கையூள்கை அறை முகாமை முறைமையானது, ரொயிட்டர், புளும்பேர்க் போன்ற வர்த்தகத் துறைகளிலிருந்து நேரடியாக தன்னியக்க முறை மூலம் பெறும் கொடுக்கல்வாங்கல் பற்றிய தகவல்களைப் பெற உதவுகின்றது. இம்முறைமையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பகுப்பாய்வு பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

- அதேநேர இடர்நேர்வைக் கண்காணித்தலும் மற்றும் மதிப்பீட்டு இயலுமை அத்துடன்
- முதலீட்டுத் தீர்மானங்களின் தரத்தை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்படக்கூடிய இடர்நேர்வு முகாமைத்துவத்துக்கான பல கணித மாதிரிக் கருவிகள்.

திறைசேரி வணிகப்படுத்தல் அறை முகாமை முறைமை தன்னியக்க தீர்ப்பனவு நடைமுறைகளையும் வழங்கும். இம்முறைமை, வினைத்திறனுள்ள தீர்ப்பனவு முறைகளை வழங்கும் அதேவேளை ஒதுக்கீட்டு முகாமைத்துவத்தில் வினைத்திறனையும், உற்பத்தித் திறனையும் மேம்படுத்துவதுடன் இடர்நேர்வுகளை கூடியவரை குறைக்கின்றது.

கருத்திற்கொண்டும், குறிக்கோள்களை அடைவதற்கு இம்முறை சுமுகமாக செயற்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை கருத்திற் கொண்டும் மத்திய வங்கியானது நாளொன்றுக் கிடையிலான திரவத்தன்மை வசதியை பங்குபற்றுநருக்கு அரசாங்க பிணையங்களுக்கெதிராக வட்டியல்லா அடிப்படையில் வழங்கி வருகிறது. 2003 செத்தெம்பர் 8 ஆம் திகதி தொடக்கம் திசெம்பர் இறுதிவரையான காலப்பகுதியில் 17 பங்குபற்றும் நிறுவனங்கள் ரூ.500 பில்லியன்

**வரைபடம் 11.4**
**வழங்கப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி**
**2003 செப்தெம்பர் 8 - திசெம்பர் இறுதிவரை**




பெறுமதியான திரவத்தன்மை வசதியை பெற்றிருந்தன. இவ்வசதியின் ஆகக்கூடிய நாளாந்த பெறுமதியாக ரூ.13 பில்லியனும் நாளாந்த சராசரியாக ரூ.6.5 பில்லியனும் காணப்பட்டன. வரைபடம் 11.4 இல் காட்டப்பட்டவாறு இக்காலப்பகுதியில் பங்குபற்றும் நிறுவனங்களால் பெறப்பட்ட திரவத்தன்மை வசதியின் அளவு ஒரு வீழ்ச்சிப்போக்கினைப் பதிவு செய்தது.

நாளொன்றுக்கிடையிலான திரவத்தன்மை வசதியின் கீழ் உருவாக்கப்பட்ட மேலதிக திரவத்தன்மையானது தீர்ப்பனவு செய்முறையை அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறையின் தனிப்பட்டவர்களின் கொடுப்பனவுகளை சுமுகமாக்கியதுடன் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் தமது திரவத்தன்மை முகாமையை உத்தமமாக்கவும் உதவியது.

## இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை

1994 இல் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறையானது பல்புடை தேறிய தீர்ப்பனவு அடிப்படையின் மீது நேரடியற்ற வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு தீர்ப்பனவு முறையாகத் தொழிற்பட்டு வருவதுடன் பங்குபற்றும் வர்த்தக வங்கிகளினாலும் மத்திய வங்கியினாலும் காந்தநாடாக்கள்/இறுவட்டுக்களில் லங்கா கிளியர் (தனி) லிமிட்டெட்டிற்கு அறிவிக்கப்பட்ட முன்னரே அங்கீகரிக்கப்பட்ட குறைந்த பெறுமதி கொண்ட தொகையான கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்கின்றது. இது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், மத்திய வங்கி மற்றும் வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர்கள் நேரடியாக உரிய கணக்கில் பற்று வைத்தும் இன்னொரு வாடிக்கையாளரது வேறொரு பங்குபற்றும் வங்கியிலுள்ள கணக்கில் வரவு வைத்தும் நிதிகளை மாற்றல் செய்வதற்கு உதவியது.

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தமது "அதேநாள் பெறுமதி" கிடைக்கும் பெரிய வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களை அதே நேர

**அட்டவணை 11.3**
**இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறையின் கீழ் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் அளவும் பெறுமதியும்**

| விடயம் | விடயங்களின் மொத்த எண்ணிக்கை ('000) | | | மொத்தப் பெறுமதி (ரூ.பில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | 2002 | 2003 | % மாற்றம் | 2002 | 2003 | % மாற்றம் |
| கொடுக்கல் வாங்கல்களின் அளவுப்படி | | | | | | |
| ரூபா 1 மில்லியனுக்கு மேல் | 24.8 | 19.2 | -23 | 1,309.1 | 942.7 | -28 |
| ரூபா 1 மில்லியனுக்குக் கீழ் | 1,583.9 | 1,997.9 | 26 | 26.6 | 36.6 | 38 |
| கொடுக்கல் வாங்கல் வகையின்படி | | | | | | |
| வரவு கொடுக்கல் வாங்கல்கள் | 1,606.6 | 2,015.3 | 25 | 1,335.7 | 979.3 | -27 |
| பற்று கொடுக்கல் வாங்கல்கள் | 2.1 | 1.7 | -16 | 0.06 | 0.08 | 31 |
| மொத்தம் | 1,608.7 | 2,017.1 | 25 | 1,335.7 | 979.3 | -27 |
| நாளொன்றிற்கு சராசரி | 6.7 | 8.4 | 25 | 5.5 | 4.1 | -27 |

மூலம். லங்கா கிளியர் பிறைவேட் லிமிட்டெட்

**வரைபடம் 11.5**
**'சிலிப்ஸ்' இன்கீழ் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுப்பனவுகளின் அளவும் பெறுமதியும்**




மொத்தத் தீர்ப்பனவு முறையினூடாக மேற்கொள்ள ஆரம்பித்ததால் இலங்கை வங்கிகளுக்கிடையேயான தீர்க்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி 2002 இல் 20 சதவீதத்தாலும், 2003 இல் மேலும் 27 சதவீதத்தால் ரூ. 979 பில்லியனுக்கும் வீழ்ச்சியடைந்தன. இதன்படி (ஒரு மில்லியனிலும் கூடியது) மொத்த கொடுக்கல் வாங்கல்களில் கூடிய பெரிய பெறுமதி கொடுக்கல் வாங்கல்களின் அளவு இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறையில் 2003 இன் முதற்காலாண்டின் 1.4 சதவீத நிலையிலிருந்து 2003 இன் நான்காம் காலாண்டில் 0.2 சதவீதமாக குறைந்தது. சம்பளங்கள், பங்கிலாபங்கள், ஓய்வூதியங்கள், நிதியியல் கட்டளைகள் போன்ற கொடுப்பனவுகளுக்குப் பிரதானமாகப் பயன்படுத்தப்பட்ட மொத்த நேரடி வரவுகளின் எண்ணிக்கை தொடர்ச்சியாக 2003 இல் அதிகரித்தது. எனினும் மொத்த பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து 2003 இல் ரூ.979 பில்லியனை அடைந்தது.

### லங்கா கிளியர் காசோலை தீர்ப்பனவு முறைகள்

### முக்கிய காசோலைத் தீர்ப்பனவு முறை

நாணயவிதிச் சட்டத்தில் 112 (பீ) பிரிவின் விதிமுறைகளுக்கிணங்க மத்திய வங்கியானது காசோலை தீர்ப்பனவு வசதிகளை வகைப்படுத்தல், பங்குபற்றும் வங்கிகளிடையே நிதிக்கருவிகளை பரிமாற்றல் (காசோலை வரைவுகள்) இவ் உரித்துக்களிலுள்ள தொகைகளை சமப்படுத்தல், தேறிய மீதிகளை தீர்த்தல் இவை தொடர்பான தகவல்களை மத்திய வங்கிக்கும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் வழங்குதல் என்பவற்றை மேற்கொள்வதற்கு லங்கா கிளியர் கம்பனி லிமிட்டெட்டிற்கு அதிகாரமளித்தது. இச் செயற்பாடானது காசோலைகளின் பௌதீகரீதியான அசைவுகளை தேவைப்படுத்துகிறது. எல்லா உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும், மத்திய வங்கியும் லங்கா கிளியர் கம்பனி (லிமிட்டெட்) இன் பிரதான காசோலை தீர்ப்பனவு முறைமையில் பங்குகொண்டன.

ரூபா கணக்கு மீதிகளுக்கெதிராக வரையப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மீதான பெரும்பாலான காசோலைகள் பல்புடை தேறிய தீர்ப்பனவு அடிப்படையில் லங்கா கிளியரால் செயற்படுத்தப்படும் பிரதான காசோலை தீர்ப்பனவு முறையூடாக சமர்ப்பிக்கப்பட்டு தீர்க்கப்பட்டன. காசோலைகள் வங்கி, கிளை மட்டம் சில சமயங்களில் வாடிக்கையாளர் மட்டங்களிலும் வகைப்படுத்தும் நடைமுறை மின்காந்தத்தினூடாக தொழில்நுட்பத்தாலும் கணனி

**வரைபடம் 11.6**
**பிரதான காசோலைத் தீர்ப்பனவு முறையின் கீழ் தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் அளவும் பெறுமதியும் 2002 - 2003**



அட்டவணை 11.4
லங்கா கிளியர் பிறைவேட் லிமிட்டெட்டின் பிரதான காசோலை தீர்ப்பனவு முறை

| விடயம் | விடயங்களின் எண்ணிக்கை ('000) | | | மொத்தப் பெறுமதி (ரூ.பில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | 2002 | 2003 | % மாற்றம் | 2002 | 2003 | % மாற்றம் |
| காசோலைத் தீர்ப்பனவு அளவின்படி | | | | | | |
| ரூபா 100 மில்லியனுக்கு மேல் | 1.1 | 1.2 | 8 | 364.5 | 345.9 | -5 |
| ரூபா 1மில்லியன் - ரூபா 100 மில்லியன் | 271.4 | 310.6 | 14 | 1,008.6 | 1,155.4 | 15 |
| ரூபா 1மில்லியனுக்குக் கீழ் | 35,214.8 | 36,171.6 | 3 | 1,071.8 | 1,175.2 | 10 |
| மொத்தம் | 35,487.4 | 36,483.4 | 3 | 2,444.9 | 2,676.6 | 10 |
| காசோலை தீர்ப்பனவு நாளொன்றிற்கு | 147.3 | 151.4 | 3 | 10.1 | 11.1 | 10 |

மூலம். லங்கா கிளியர் பிறைவேட் லிமிட்டெட்

மயப்படுத்தபட்ட காசோலை வாசிக்கும், வகைப்படுத்தும் எந்திரங்களாலும் வகைப்படுத்தப்பட்டன.

வங்கிகளுக்கிடையிலான தேறிய தீர்ப்பனவு கடப்பாடுகள் வர்த்தக வங்கிகளின் கோரிக்கைகள் என்பன மாற்றமுடியாதபடி லங்கா கிளியரால் அதேநேர மொத்தத் தீர்ப்பனவுமுறையில் காசோலைகள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் சமர்ப்பிக்கப்பட்டு அடுத்தவரும் வேலைநாளன்று தீர்க்கப்பட்டன.

2003 இல் பிரதான காசோலை தீர்ப்பனவு முறையினால் தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் மொத்த எண்ணிக்கை 3 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. 2003 இல் தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் மொத்தப் பெறுமதி 10 சதவீதத்தால் அதிகரித்து ரூ.2,677 பில்லியனாக அமைந்தது. 2003 இன் மொ.உ.உற்பத்தியின் ஒன்றரை மடங்கைக் காட்டிலும் இது அதிகமானதாகும். 2003இல் பிரதான காசோலை தீர்ப்பனவு முறைமையினால் தீர்க்கப்பட்ட கூடிய பெறுமதியுடைய காசோலைகளின் எண்ணிக்கையும் பெறுமதியும் (ரூ.1 மில்லியனுக்கு மேல்) தொடர்ந்தும் முறையே சுமார் 1 சதவீதமாகவும், 56 சதவீதமாகவும் காணப்பட்டன. நாளொன்றில் தீர்க்கப்பட்ட சராசரி காசோலைகளின் எண்ணிக்கையானது 2002 இல் சிறிய வீழ்ச்சியைப் பதிவு செய்து 2003 இல் 151,383 இற்கு 3 சதவீதத்தினால் அதிகரித்தது. காசோலை தீர்க்கப்படும் நாட்களின் எண்ணிக்கையானது லங்கா கிளியரினால் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் ஆலோசனையுடன் நிர்ணயிக்கப்படும் காசோலை தீர்க்கப்படும் நேர அட்டவணைப்படியே காசோலை தீர்த்தல் இடம்பெறுகின்றது. இது 1-10 நாட்கள் வரை வேறுபடும். வெளியிடங்களிலுள்ள வங்கிக்கிளைகளின் காசோலை தீர்ப்பனவில் சுமார் 82 சதவீதமானவை மூன்று நாட்களுக்குள் மேற்கொள்ளப்படுகின்றன.

### தீர்த்தல் தீர்ப்பனவு முறைமை

பிரதான காசோலை தீர்த்தல் முறைமையின் கீழ் தொடர்பான கொடுப்பனவு வங்கிகளால் திருப்பப்பட்ட எல்லா காசோலைகளும் தீர்ப்பனவு முறைமையில் செலுத்தப்படாது திருப்பப்பட்ட விடயங்கள் எனக் கொள்ளப்படும். இத்தீர்ப்பனவு வழக்கமாக பிரதான காசோலை தீர்ப்பனவு நாளுக்கு அடுத்த வேலைநாளில் பி.ப 1.30 இற்கும் இடம்பெறும். லங்கா கிளியர் (தனி) கம்பனி இவற்றை மனித உழைப்பினால் பல்புடை தேறிய தீர்ப்பனவு அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதுடன் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையிலுள்ள பங்குபற்றும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கணக்குகளை அதேநாளில் பி.ப.2.15 அளவில் பூரணப்படுத்துவதற்காக தீர்ப்பனவு மீதிகளை மத்திய வங்கிக்கு அதேநாளன்று பி.ப 2.15 இற்கு மாற்றல் செய்ய வேண்டும். இம்முறையில் தீர்ப்பனவு மீதிகளை செய்யப்பட்ட காசோலைகளின் மொத்த பெறுமதி 2003 இல் சுமார் ரூபா 34.8 மில்லியானாக அல்லது பிரதான காசோலை தீர்ப்பனவு முறையில் தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் மொத்தப் பெறுமதியில் 1 சதவீதமாக காணப்பட்டது.

### ரூபாவிலான வரைவுகளை தீர்ப்பனவு செய்யும் முறைமை

வெளிநாட்டு வங்கிகள் அவற்றின் இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளுடன் தாம் கொண்டிருக்கம் “நொஸ்ரோ” கணக்குகளில் இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர்களுக்காக வரையப்பட்ட

அட்டவணை 11.5
2003இன் இறுதியில் காசோலைத் தேறலின் நேர அட்டவணை

| நாட்களின் எண்ணிக்கை | வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| 1 | 417 | 38.6 |
| 2 | 243 | 22.5 |
| 3 | 228 | 21.1 |
| 4 | 107 | 9.9 |
| 5 | 37 | 3.4 |
| 7 | 39 | 3.6 |
| 10 | 9 | 0.8 |
| மொத்தம் | 1,080 | 100 |

மூலம். லங்கா கிளியர் பிறைவேட் லிமிட்டெட

காசோலைகள்/ வங்கி வரைவுகள் என்பன மனித உழைப்பினால் லங்கா கிளியரின் ரூபா வரைவு தீர்த்தல் முறைமையினூடாக தீர்க்கப்படுகின்றன. இத்தீர்ப்பனவின் தேறிய தீர்ப்பனவு மீதிகள் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையில் பி.ப.2.15 அளவில் தீர்க்கப்படுகின்றன. 2003 இல் ரூபா வரைவு தீர்த்தல் முறையினூடாக தீர்க்கப்பட்ட காசோலைகளின் மொத்தப் பெறுமதி ரூ.4 பில்லியனாகும்.

### பிராந்திய காசோலை தீர்ப்பனவு முறைமை

அநுராதபுரம், மாத்தறை, மாத்தளை என்னுமிடங்களிலுள்ள மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகங்கள் அந்தந்த பிராந்தியங்களில் இயங்கும் வர்த்தக வங்கிகளால் சமர்ப்பிக்கப்படும் காசோலைகளை தீர்க்கும் பணியைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வந்தன. வர்த்தக வங்கிகளின் பிராந்திய காசோலை தீர்ப்பனவு முறையின் கீழ் தேறிய தீர்ப்பனவு கடப்பாடுகள்/ கோரிக்கைகள் அதேநாளில் பி.2.45 மணிக்கு அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையில் ஒரு தொகுதியாக தீர்ப்பனவு செய்யப்படுகின்றன. 2003 இல் பிராந்திய தீர்ப்பனவு முறைமையானது ரூ.51 பில்லியன் பெறுமதியான 1.3 மில்லியன் காசோலைகளை தீர்ப்பனவு செய்தது. ஒப்பிடுகையில் 2002 இல் இப்பெறுமதிகள் முறையே 1.4 மில்லியனாகவும், ரூ.47 பில்லியனாகவும் காணப்பட்டன.

### ஐக்கிய அமெரிக்க டொலர் காசோலை தீர்த்தல்முறைமை

லங்கா கிளியர் கம்பனியால் 2002 இல் ஆரம்பிக்கப்பட்ட டொலர் காசோலை தீர்த்தல் முறைமையானது ஒரு பகுதியளவில் கணனி மயப்படுத்தப்பட்ட சிறிய பெறுமதி சில்லறை மட்ட ஐ.அ.டொலர்களில் இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட இலங்கையிலுள்ள தனிநபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் கொடுபடத்தக்கதும் காசோலைகளுக்கும் வரைபுகளுக்குமான தீர்ப்பனவு முறையாகும். அத்துடன் வெளிநாடுகளிலுள்ள வங்கிகள்/பரிமாற்று நிலையங்களால் இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளின் மீது வரையப்பட்ட காசோலைகள்/ வரைவுகளும் இம்முறைமையினூடாக தீர்க்கப்படும். ஒப்பீட்டளவில் விரைவானதும் குறைந்த செலவினைக் கொண்டதுமாக அமைந்தது. இவ்தீர்ப்பனவு முறைமை வர்த்தக வங்கிகள் தமது தீர்த்தல் நேரத்தினை 3 கிழமைகளிலிருந்து சுமார் 4 வேலை நாட்களுக்கும் குறைக்க உதவியது. 2003 இன் இறுதியில் 16 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் இம்முறைமையில் பங்குகொண்டு தீர்ப்பனவு வங்கியான சம்பத் வங்கியிலுள்ள தமது "நொஸ்ரோ" கணக்கு தமது தேறிய தீர்ப்பனவு கடப்பாடுகள்/ கோரிக்கைகளை தீர்ப்பனவு செய்துகொண்டன. 2003 இல் ஐ.அ.டொலர் காசோலை தீர்ப்பனவு முறைமை ரூ.10,678 மில்லியன் (110.6 மில்லியன் அமெரிக்க டொலர்) பெறுமதி கொண்ட 86,104 காசோலைகளையும் மற்றும் வரைவுகளை தீர்ப்பனவு செய்து கொண்டது.

### 11.5 பிணையங்களின் வர்த்தகப்படுத்தல், தீர்த்தல், தீர்ப்பனவு முறைகள்

இலங்கையிலுள்ள ஒரேயொரு பங்குப் பரிவர்த்தனை நிலையமான கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம் அதேநேர வர்த்தகத்திற்காக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையினால் பதிவு செய்யப்பட்ட கம்பனிப் பங்குகள் மற்றும் கடன் பிணையங்களை மேற்கொள்ளவென 1997 முதல் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையானது தன்னியக்க வியாபார முறைமையை செயற்படுத்தி வருகிறது. 2003 யூனில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையானது கடன் பிணையங்கள் வியாபார முறைமையையும் ஆரம்பித்தது.

2003 இறுதியில் 260 வகையான பங்குகளும் 38 வகையான கம்பனி படுகடன் பிணையங்களும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டிருந்தன. 2003 இல் 254 கம்பனிகளின் சாதாரண பங்குகளும், 19 கம்பனி கடன் பிணையங்களும் வியாபாரம் செய்யப்பட்டன. 2002 உடன் ஒப்பிடுகையில் தன்னியக்க வர்த்தக முறையில் பதிவு செய்யப்பட்ட பிணையங்களது வர்த்தகம் செய்யப்பட்ட மொத்தப் பெறுமதியும், அளவும் இரண்டு மடங்கு அதிகரிப்பைக் காட்டி முறையே ரூ.73.8 பில்லியனாகவும், 2,225 மில்லியனாகவும் 2003 இல் காணப்பட்டன. கம்பனிகளின் கடன் பிணையங்கள் பெறுமதி அடிப்படையிலும், அளவு அடிப்படையிலும் 1 சதவீதத்தை விட குறைந்த அளவுக்கே பங்களித்தமையின் காரணமாக பங்குகளின் வர்த்தகமே கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் ஆதிக்கம் செலுத்தியது. கடன் பிணையங்கள் வர்த்தக முறைமையானது 2003 யூனிலிருந்து செயற்பட்டபோதிலும் அரச பிணையங்கள் எதுவும் 2003 இல் வர்த்தகம் செய்யப்படவில்லை.[3] கடன் பிணையங்கள் வர்த்தக முறையில் வியாபாரம் செய்ய தகுதியான பிணையங்கள் அரச பிணையங்களில் (திறைசேரி உண்டியல்களும் திறைசேரி முறிகளும்) உள்ள "நன்மைபெறும் பாத்தியமும்" மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பிணையங்கள் மற்றும் கம்பனி படுகடன் பிணையங்கள் என்பனவும் உள்ளடங்கும். தற்போது அரச பிணையங்களிலுள்ள "நன்மை பெறும் பாத்தியம்" மாத்திரமே கடன் பிணைங்களின் வர்த்தக முறையில் வியாபாரம் செய்யப்படுகின்றன. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் விலை கூறப்பட்ட கம்பனிகளின் கடன் பிணையங்களும் விரைவில் கடன் பிணையங்கள் வர்த்தக முறையின் ஊடாக வியாபாரம் செய்யப்படவுள்ளன.

3. க.பி.வி.மு வில் அரச பிணையங்களது வியாபாரம் உத்தியோக பூர்வமாக 2004 மாச்சு 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

வேறுபட்ட பிணையங்களுக்காக சந்தை அபிவிருத்தி செய்யப்படுவதனை ஊக்குவிக்கும் பொருட்டு மத்திய வங்கியானது கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை மத்திய வைப்பக முறைமைகள் (தனி) லிமிட்டெட்டை ஒரு நேரடி பங்குபற்றுநராக லங்கா செற்றில் முறைமையில் இணைத்துக்கொள்ளும் கொள்கைத் தீர்மானமொன்றை எடுத்துள்ளது. மத்திய வைப்பகமுறை கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்குச் சொந்தமான ஒரு துணைக் கம்பனியாகும். இக்கம்பனி தன்னியக்க, வர்த்தகமுறை மற்றும் கடன் பிணையங்கள் வர்த்தகமுறை என்பவற்றினூடாக கொடுக்கல்வாங்கல் செய்யப்பட்ட பிணையங்களுக்கான இலத்திரனியல் தீர்த்தல் மற்றும் தீர்ப்பனவு முறையை தொழிற்படுத்தியது.

2003 இன் இறுதியில் 15 பங்குத்தரகர் நிறுவனங்கள் 17 நம்பிக்கை பொறுப்பு வங்கிகளும் ஆக 32 நிறுவனங்கள் தீர்ப்பனவுகளில் பங்குகொண்டன. கடன் பிணையங்கள் வர்த்தகமுறை ஊடாக செயற்படுத்தப்பட்ட ஒவ்வொரு பிணைய கொடுக்கல்வாங்கல்களும் ஒரு பங்குத்தரகரால் அல்லது கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் இன் வியாபார செயற்பாட்டு அதிகாரமுடைய ஒரு அங்கத்தவரால் முறைமையில் பதிவு செய்யப்பட வேண்டும். இருப்பினும் பங்குத்தரகர்கள் மாத்திரமே தன்னியக்க வர்த்தக முறையில் தமது வாடிக்கையாளர் சார்பில் செயற்பட தகுதியுடையோராக இருந்தனர். மேலே குறிப்பிட்ட பங்குதாரர்கள் மறும் வியாபார அங்கத்தவர்களுக்கு மேலதிகமாக வாடிக்கையாளர் மத்திய வைப்பக முறையின் கணக்குகளை நம்பிக்கைப் பொறுப்பு வங்கிகளூடாகவும் செயற்படுத்த முடிவதுடன் நம்பிக்கைப் பொறுப்பு வங்கியின் மத்திய வைப்பக முறையினூடாக தீர்ப்பனவில் பங்கேற்கலாம்.

தன்னியக்க வர்த்தகமுறை மற்றும் கடன் பிணையங்கள் வர்த்தகமுறை எனும் இரண்டு முறைகள் மத்திய வைப்பக முறைமையின் தீர்ப்பனவு முறையுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளன. தன்னியக்க வர்த்தக முறையில் வியாபாரம் செய்யப்படும் பிணையங்களின் தீர்ப்பனவானது அதேநேரத்தில் உரிய பிணையங்களின் மத்திய வைப்பக முறையில் இல் உள்ள உரிமத்துவத்தை மாற்றுவதனூடாக இடம்பெறும். பங்கு கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான நிதித் தீர்ப்பனவு வியாபாரம் நடந்து ஐந்தாம் நாள் (T+5) வாங்கியவரைப் பொறுத்தும் வியாபாரம் நடந்து ஆறாம் நாள் (T+6) விற்றவரைப் பொறுத்தும் தீர்த்து வைக்கப்படும். பங்கு பற்றுநர்களுக்கிடையிலான தீர்ப்பனவும் மத்திய வைப்பக முறை ஊடாக வியாபாரம் நடந்து ஆறாம் நாள் (T+6) மேற்கொள்ளப்படும். தன்னியக்க வர்த்தக முறையில் மேற்கொள்ளப்படும் கம்பனி கடன் பிணையங்களின் தீர்ப்பனவு நாளானது வாங்கியவரையும், விற்றவரையும் பொறுத்து வியாபாரம் நடத்த நாளுக்கு மறுநாள் (T+1) ஆக இருக்கும். நம்பிக்கை பொறுப்பு வங்கிகள் தமது வாடிக்கையாளர் சார்பில் சமப்படுத்தப்பட்ட பங்குகளின் வியாபாரத்தை வியாபாரம் நடந்து நான்காம் நாள் (T+4) உறுதிப்படுத்தும் அல்லது நிராகரிக்கும் சிறப்புரிமையைக் கொண்டுள்ளது. நம்பிக்கைப் பொறுப்பு வங்கி ஒரு வியாபாரத்தை நிராகரிப்பின் அவ்வியாபாரத்துக்கான தீர்ப்பனவுப் பொறுப்பு வியாபாரத்தை நிறைவேற்றிய பங்குத்தரகருக்கு மாற்றப்படும்.

மத்திய வைப்பக முறைமையானது நாளாந்தம் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் நிறைவு செய்யப்பட்ட பங்கு மற்றும் கடன் பிணையங்களது வியாபாரங்கள் தொடர்பான தீர்ப்பனவு பொறுப்புக்களை பங்குபற்றுநருக்குத் தெரியப்படுத்து கின்றது. நம்பிக்கைப் பொறுப்பு வங்கியினால் நிராகரிக்கப்பட்ட பங்கு வியாபாரம் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய எந்தவொரு சீராக்கம் தொடர்பான இறுதி தீர்ப்பனவுப் பொறுப்பைத் தீர்மானிக்கும் போது கருத்திற் கொள்ளப்படும்.

கடன் பிணையங்கள் வர்த்தக முறையினூடாக இடம்பெறும் கடன் பிணையங்களின் தீர்ப்பனவானது வழங்கல எதிர் கொடுப்பனவு என்ற அடிப்படையில் இடம்பெறுகிறது. நிதித் தீர்ப்பனவுகள் நிறைவு செய்யப்பட்டால் மாத்திரமே பிணையங்கள் தீர்ப்பனவு செய்யப்படும். கடன் பிணையங்கள் வர்த்தகத்தில் பங்குத்தரகர்களும் பிரத்தியேக வர்த்தக உறுப்பினர்களும் வியாபார அங்கத்தவர்களும் சம்பத் வங்கியுடன் "நொஸ்ரோ" கணக்குகளை தமது பொறுப்புக்களை தீர்ப்பதற்காகப் பராமரிக்கின்றனர். நம்பிக்கைப் பொறுப்பு வங்கிகள் தமது பொறுப்புக்களை இருபுடை அடிப்படையில் தமது காசோலை அல்லது இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை அல்லது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை ஊடாக தீர்க்கமுடியும்.